ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1773/34 - 2012 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.08.30

*1773/34 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, நகர அபிவிருத்திக்குப் பொறுப்பான பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராகிய மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நகர அபிவிருத்திப் பகுதிகளாக ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளைத் தவிர அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட பகுதிகள் ; அட்டவணை II இன் நேரொத்த பகுதிகளாகிய நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளதில் உள்ள மிகுதிப் பகுதிகள் அபிவிருத்திக்கு ஏற்றதாக கருதுவதனால், மேற்குறிப்பிட்ட பிரிவின் கீழ் நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*அத்துடன், ஏற்கனவே அட்டவணை I இல் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளுடன் மேற்குறிப்பிட்ட பிரகடனப்படுத்தப்பட்ட மற்றைய பகுதிகளையும் அட்டவணை II இன் கீழ் நிரல் II இல் தரப்பட்டுள்ள எல்லைகளுள் அடக்கி ஹிக்கடுவை நகர அபிவிருத்திப் பகுதியாகப் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்.*

*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,*
*இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,*
*கொழும்பு 03,*
*2012, யூன் 25.*

**அட்டவணை *I***

| | | |
|---|---|---|
| *1.* | *வர்த்தமானப் பத்திரிகை இல. 116/6* | *ஹிக்கடுவை நகரசபையின் (ஹி. ந.ச.) பகுதியானது நகர அபிவிருத்திப் பகுதியாக 26.11.1980 ஆம் ஆண்டின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.* |
| *2.* | *வர்த்தமானப் பத்திரிகை இல. 196/14* | *ஹிக்கடுவை நகரசபைப் பகுதியினுள் அமைந்துள்ள திரணகம மற்றும் நாரியகம கிராம சேவகர் பிரிவுகள் நகர அபிவிருத்திப் பகுதியாக 11.06.1982 இல் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.* |
| *3.* | *வர்த்தமானப் பத்திரிகை இல. 223/16* | *ஹிக்கடுவை நகரசபைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு கி. மீ. கரையோர வலயமானது நகர அபிவிருத்திப் பகுதியாக 17.12.1982 இல் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.* |

**அட்டவணை *II***

*நகர அபிவிருத்திப் பகுதியாக பிரகடனப்படுத்தப்படவுள்ள எஞ்சிய ஹிக்கடுவை நகரசபைப் பகுதி*

*நிரல் I*

தென் மாகாண, காலி மாவட்டம் ஹிக்கடுவை நகரசபைப் பகுதியில் அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவுகளாகிய இல. 59D வெள்ளவத்தை, இல. 59 E, நாக்கந்தை, இல. 59A, ஹிக்கடுவை, இல. 59, ஹிக்கடுவை நகரம், இல. 59B, ஹிக்கடுவை மத்தி, இல. 58A, வவுலகொடை கிழக்கு, இல. 59, வவுலகொடை மேற்கு, இல. 57A, பன்னஸ்கொடை, இல. 57B, மில்லகொடை, இல. 59C, நலகஸ்தெனியா, இல. 56B, குடா வேவல, இல. 55B, தெல்கஹாதூவ, இல. 57, வேவல, இல. 56A, நாரிகம, வெல்லபட, இல. 56, நாரிகம, இல. 54, திரணகம, இல. 55, கட்டுகொஹொலிய, இல. 55A, பின்கந்தை, இல. 55C, ஹந்தஉடுமுல்லை, இல. 54A, திரணகம வெல்லபட, இல. 53B, ஹென்னதோட்டை, இல. 53, பட்டுவத்தை, இல. 53A, கம்மடுவத்தை, இல. 52A, தொடந்துகொடை, இல. 52, மோதரை பட்டுவத்தை, இல. 51, தொடந்தூவ மற்றும் இல. 51A, உடுகல்பிட்டி ஆகிய சகல பகுதிகளையும் அடக்கியுள்ளது.

*நிரல் II*

**வடக்கு** : தாவரக்கோடு அமைந்துள்ளதும் வெள்ளவத்தை கி. சே. பி இல. 59 D, இனது வடக்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியிலிருந்து, வடகிழக்கேயும், தென் கிழக்கேயுமாக மேற்குறிப்பிட்ட கி. சே. பி. இல. 59 D, இனது வடக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது அதே கி. சே. பி. இனது கிழக்கு எல்லையை அடையும் வரை; பின்பு, தென்மேற்காக மேற்குறிப்பிட்ட கி. சே. பி இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது, நாகந்த கி. சே. பி பிரிவு இல. 59 E, இனது வடக்கு எல்லையை அடையும் வரை; பின்பு, வடகிழக்கு மற்றும் கிழக்கே மேற்குறிப்பிட்ட கி. சே. பி. இல. 59 E, இனது வடக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது மேற்குறிப்பிட்ட கி. சே. பி. இனது கிழக்கு எல்லையைச் சந்திக்கும் வரை; பின்பு, தென்கிழக்கே மேற்குறிப்பிட்ட கி. சே. பி. இனது கிழக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது ஹிக்கடுவை மத்திய கி. சே. பி. இல. 59B, இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியை அடையும் வரை ; பின்பு மேற்குறிப்பிட்ட கி. சே. பி. இல. 59B, இனது கிழக்கு எல்லையோரமாக தென்கிழக்கேயும் தென்மேற்கேயுமாக கீறப்பட்ட கோடானது நலகஸ்தெனியா கி. சே. பி. இல. 59C, இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, தென் கிழக்கேயும் தென்மேற்கேயுமாக குறிப்பிட்ட கி. சே. பி. இல. 59C இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது குடாவேவல கி. சே. பி. இல. 56B இனது வடக்கு எல்லையை அடையும் வரை; பின்பு, வடகிழக்கே மேற்குறிப்பிட்ட கி. சே. பி. இல. 56B, இனது வடக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது தெல்கஹாதூவ கி. சே. பி. இல. 55B, இனது வடக்கு எல்லையினை அடையும் வரை; பின்பு, வடகிழக்கேயும் தென்கிழக்கேயுமாக மேற் குறிப்பிட்ட கி. சே. பி. இல. 55B, இனது வடக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது பின்கந்தை கி. சே. பி இல. 55A, இனது வடக்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு, கிழக்கேயும் தென் மேற்கேயுமாக மேற்குறிப்பிட்ட கி. சே. பி. இல. 55A, இனது வடக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது ஹந்தவுதுமுல்லை கி. சே. பி. இல. 55C இனது வடக்கு மற்றும் மேற்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு, தென்கிழக்கே, வடகிழக்கே மற்றும் தென்கிழக்கே மேற்குறிப்பிட்ட கி. சே. பி. இல. 55C, இனது வடக்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது மேற்குறிப்பிட்ட கி. சே. பி. இனது கிழக்கு எல்லையினை அடையும் வரை.

**கிழக்கு** : கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தென்மேற்கே, தெற்கே மற்றும் தென்மேற்கே ஹந்தவுடுமுல்லை கி. சே. பி. இல. 55C, இனது கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது 1100 மீ. தூரம் வரை சென்று அதே கி. சே. பி. இல. 55 C, இனது தெற்கு எல்லையைச் சந்திக்கும் வரை; பின்பு, தென்மேற்கேயும் வடமேற்கேயுமாக அதே கிராம சே. பி. இல. 55C, இனது தெற்கு எல்லையோரமாகக் கீறப்பட்ட கோடானது பின்கந்தை கி. சே. பி. இல. 55 A இனது கிழக்கு எல்லையை அடையும் வரை ; பின்பு, குறிப்பிட்ட

**அட்டவணை** *II (தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| | கி. சே. பி. இல. 55A இனது கிழக்கு எல்லையோரமாக தென்மேற்கேயும் தென் கிழக்கேயுமாக கீறப்பட்ட கோடானது அதே கி. சே. பி. இல. 55A இனது தெற்கு எல்லையை அடையும் வரை ; பின்பு அதே கி. சே. பி. இல. 55A இனது தெற்கு எல்லையோரமாக வட மேற்கேயும் தென்மேற்கேயுமாகக் கீறப்பட்ட கோடானது ஹென்னதோட்ட கி. சே. பி. இல. 53B இனது கிழக்கு எல்லையினை அடையும் வரை ; பின்பு, அதே கி. சே. பி. இல. 53B இனது கிழக்கு எல்லையோரமாக தென்மேற்கே கீறப்பட்ட கோடானது தொடந்துகொடை கி. சே. பி. இல. 52A இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு, அதே கி. சே. பி. இல. 52A இனது கிழக்கு எல்லையோரமாக தென்கிழக்கேயும் தென் மேற்கேயுமாக கீறப்பட்ட கோடுகள் தொடந்தூவ கி. சே. பி. இல. 51 இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை ; பின்பு, அதே கி. சே. பி. இல. 51 இனது கிழக்கு எல்லையோரமாக தென்கிழக்கே கீறப்பட்ட கோடானது உடுஹல்பிட்டி கி. சே. பி. இல. 51A இனது வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் சந்திக்கும் புள்ளியினை அடையும் வரை; பின்பு, அதே கி. சே. பி. இல. 51A இனது கிழக்கு எல்லையோரமாக தென்கிழக்கேயுமாக தென்மேற்கேயுமாகக் கீறப்பட்ட கோடானது கொழும்பு - காலி பிரதான வீதியினைக் கடந்து கரையோர தாவரக் கோட்டினை அடையும் வரை. |
| | **தெற்கு** : தெற்கானது தாவரக்கோடும் உடுகல்பிட்டி கி. சே. பி. இல. 51A இனது தெற்கு எல்லையும் சந்திக்கும் புள்ளியாகும். |
| | **மேற்கு** : கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வடமேற்கே தாவரக் கோட்டோரமாகக் கீறப்பட்ட கோடானது தொடக்கப் புள்ளியினை அடையும் வரை. |

9 - 415

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.